1972 மார்ச் 17]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அரசினர் அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு தலைக்கு 20 காசு வீதத்தில், இலவசமாக தேநீரும், ரொட்டி அல்லது பன் ரொட்டி வழங்கும் திட்டம் ஒன்று ஏற்கெனவே செயலில் உள்ளது. இருந்த போதிலும், நடைமுறையில் சென்னை மாநகரில் தங்கசாலையில் உள்ள மத்திய அச்சகத்திலும், அண்ணாசாலை, உயர்நீதிமன்றம் ஆகிய இடங்களில் உள்ள கிளை அச்சகங்களிலும், மாவட்டங்களில் புதுக்கோட்டையில் உள்ள கிளை அச்சகத்திலும் மட்டுமே இவை வழங்கப்படுகின்றன. இவற்றை வழங்குவதில் நடைமுறையில் தோன்றிய இடையூறுகளின் காரணமாக, சென்னை மத்திய சிறை அச்சகத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு தலைக்கு 20 காசு ரொக்கமாக வழங்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி, சேலம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் டெண்டர் கேட்டு அறிவிப்பு விடுக்கப்பட்டபொழுது, ஒப்பந்தக்காரர் எவரிடமிருந்தும் டெண்டர் ஏதும் வரவில்லையாதலால், அவ்விடங்களிலுள்ள வட்டார அரசினர் அச்சகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு மேலே சொல்லப்பட்ட வீதத்தில் ரொக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த மாதிரி அச்சகங்களிலே நைட் ஷிப்ட் வேண்டாம் என்று சொல்லிவிட்டு பகலிலே வேலைசெய்தால் நல்லதல்லவா? தொழிலாளர்கள் நைட் ஷிப்ட் செய்வது கஷ்டமாக இருக்குமே. எனவே இதை மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இந்தக் கருத்தைச் சொல்கிறார்கள். ஆனால் தொழிலாள தோழர்கள் ஓவர் டைம் வேண்டும், நைட் ஷிப்ட் வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஓவர்டைம் முறையை எவ்வளவு குறைக்கலாம் என்பதைப் பரிசிலித்து வருகிறது.

ஆண்டிப்பாளையத்திலுள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்

* 583 வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், ஆண்டிப்பாளையம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஆண்டிப்பாளையம் கிராமத்தில் உள்ள 12 அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிக்க பால ராஜபுரத்தில் சர்வே எண். 46-7-ஏ-இல் 1 ஏக்கர் பரப்பளவுள்ள புன்செய் பட்டா நிலங்களை நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் 6-வது

பிரிவின் கீழ் உள்ள விளம்பர அறிவிப்பு வரைவு சமூக நலத்துறையின் 19—8—1971 நாளிட்ட 1654 ஆம் எண் அரசு ஆணையில் ஏற்கப்பட்டு 15—9—1971 நாளிட்ட பாகம் -வது பிரிவு 1 தமிழ்நாடு அரசிதழில் 869-ம் பக்கத்தில் (ஆங்கிலம்) வெளியிடப்பட்டது. இதற்குமேல் அவார்டு அளிப்பது, நிலத்தை கையகப்படுத்தி பிரித்து அரிசனங்களுக்கு அளிப்பது அரிசன நல தனி தாசில்தார், மாவட்ட ஆட்சியர் இருவரின் பொறுப்பாகும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஆண்டிபாளையம் என்ற கிராமத்தில் பொதுமக்களுக்கு வீட்டு மனைக்குரிய இடத்தைக் கையகப்படுத்திக் கொடுப்பதற்கான பிரச்னை 1967 ஆம் ஆண்டிலிருந்தே நடந்துகொண்டு இருக்கிறது. ஆகவே துரிதமாக நடவடிக்கை எடுத்து இதை நிறைவேற்றுவதற்கு விரைவில் முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்களுக்காக முதலிலே தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தைக் கையகப்படுத்தவேண்டுமென்ற நிலைமையிலே இருக்கும்பொழுது அவர்களாக முன்வந்து அந்த இடத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். பிறகு அந்த இடத்தை காளிபாளையம் கிராமத்திலுள்ளவர்களுக்குக் கொடுக்கலாமா என்று உத்தேசம் இருந்தது. ஆனால் அவர்களும் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். அடுத்தபடி 46/7 ஏ இல் உள்ள இடத்திலே ஒரு ஏக்கர் புஞ்சை நிலத்தைக் கையகப்படுத்தி பட்டா செய்வதற்கு திட்டம் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திப்பட்டியிலுள்ள அரிசனங்களுக்கு குடிநீர்

* 539 வின.—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மத்திப்பட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குடிநீர் வழங்க மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் எப்போது துவக்கப்பட்டது ?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1971-ம் ஆண்டு சனவரி திங்களில் துவக்கப்பட்டது.

(இ) தற்போது கீழ்த்தளம் வரை கட்டப்பட்டுள்ளது. மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டுபவர் பாதி வேலையில் நின்று விட்டதனால், அவருடைய ஒப்பந்தத்தை ரத்து செய்து வேறு நபர்மூலம் வேலையை முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்துள்ளார்.